JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **82/2019** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | டெக்ஸ்டர் மெலோனி | Village | Railway colony, Erode |
| Father's Name | அல்ஸ்டர் கான்ரெட் மெலோனி | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 05.08.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு ஆன்லைனில் பாலிசி பஜாரில் மேலாளராக வேலை பார்த்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் CA படித்து வந்தேன். 18.01.2017 ம் தேதி காலை 5.00 மணிக்கு கோவை சி எஸ் அகாடமியில் பி டி மாஸ்டராக வேலை பார்த்து வந்த என் தம்பி ஜோசப் ரேமோன் மெலோனி என்பவர் ஈரோட்டில் இருந்து TVS Star city TN 33 BK 4479 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் புறப்பட்டு சென்றபோது விஜயமங்கலம் வாய்ப்பாடி பிரிவில் காலை 5 45 மணிக்கு ஏதோ ஒரு வாகனம் என் தம்பியின் வாகனத்தின் மீது மோதியதில் அவருக்கு தலையில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டு விட்டதாக காலை 6 மணி சுமாருக்கு அவ்வழியாக சென்ற யாரோ ஒருவர் என் தம்பியின் சட்டை பாக்கெட்டில் இருந்த போனை எடுத்து பார்த்தும் சட்டை பாக்கெட்டில் இருந்த என்னுடைய நம்பரை தொடர்பு கொண்டு என் தம்பிக்கு சாலை விபத்து ஏற்பட்டு ஏற்பட்டுவிட்டது என்றும் அவரை பெருந்துறை அரசு மருத்துவமனையில் சேர்த்து இருப்பதாக கூறியதன் பேரில் நானும்,

என் அம்மாவும் அப்பாவும் உறவினர்களும் வந்து பார்த்தபோது என் தம்பி தலையிலும், நெற்றிக்கு மேல் பலத்த ரத்தக்காயம் ஏற்பட்டு இறந்துவிட்டார்.

2. அதன் பின்னர் அன்றைய தினம் பெருந்துறை காவல் நிலையத்திற்கு சென்று என் தம்பியின் வாகன விபத்து சம்பந்தமாக புகார் ஒன்றை கொடுத்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே பெருந்துறை அரசு மருத்துவமனையில் பிரேத கிடங்கில் வைத்துள்ள என் தம்பியின் பிரேதத்தின் மீது பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரேத விசாரணை மேற்கொண்ட போது நான் உடனிருந்தேன். என் தம்பியின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்க எனக்கு தெரிந்த விவரங்களை கூறினேன். என் தந்தை பெயர் மேலோனி அஃலிசன் காண்ட்ரிட் ஆவார். அவர் கடந்த 17.08.2022 ம் தேதி அன்று இறந்து விட்டார். போலீசார் விசாரிக்கும் போது என் தந்தையின் பெயர் அல்ஸ்டர் கான்ரெட் மெலோனி என தவறுதலாக குறிப்பிடப்பட விட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** சம்பவம் எனக்கு எத்தனை மணிக்கு தகவல் தெரிந்தது என்றால் காலை 6:00 மணிக்கு தகவல் தெரிந்தது. சம்பவ இடத்திற்கு நான் எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் காலை ஏழு மணிக்கு வந்தேன். நான் சம்பவ இடத்துக்கு வரும்போது இரு வாகனங்களும் அங்கு இருந்ததா என்றால் இல்லை. என்னை எங்கு வைத்து போலீசார் விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்திலும், மருத்துவமனையிலும் வைத்து விசாரித்தார்கள். விபத்து தொடர்பாக நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை